நகரத்தார் குரல்


(சமூக, இலக்கிய மாத இதழ்)



கங்கை வானதி யோடு வளர்ந்தவர்
கற்கண் டாக இனிக்கப் பிறந்தவர்.
சங்கர் லாலே அறிமுகம் செய்தவர்
தமிழ்வா ணன்திருத் தாளிணே போற்றுவாம்

டிசம்பர் 1992

பதின்மூன்றாம் ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம் :
29-12-1924

மறைவு :
26-12-1979

அமரர் அரு. இராமசாமி செட்டியார் அவர்கள்

முன்னாள் நிர்வாக இயக்குநர்: ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட்
முன்னாள் இயக்குநர் : தி நெல்லை பைனான்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் இயக்குநர் : அருணா கெமிக்கல்ஸ் & ஃபார்ம்ஸ் (பி) லிமிடெட்
முன்னாள் உரிமையாளர்: ஸ்ரீ விசாலம் ஃபைனான்சியர்ஸ்
முன்னாள் நிர்வாக உரிமையாளர்: ஸ்ரீ கோகுலம் பண்ணைகள்
முன்னாள் அறங்காவலர்: ஸ்ரீ விசாலம் அறக்கட்டளை

"அறிவார்ந்த செயலால் அகிலம் வென்றாய்
செறிவார்ந்த அன்பால் சுற்றம் கவர்ந்தாய்
இறையாண்மை நிறைவால் ஈன்றாய் நன்மக்கள் இன்று
இறையாகி எம் நெஞ்சில் நிறைவாகி நின்றாய்!

என்றும் தங்கள் நினைவை மறவாத

மகன்: ராம. அருணாசலம், மருமகள், மகள்கள்,
மருமகன்கள், பேரக் குழந்தைகள்

மற்றும் மேற்கண்ட

நிறுவனங்களின் அலுவலர்கள்.

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 11

ஆங்கிரஸ
கார்த்திகை

டிசம்பர்
1992

புல்லும் பசுவிற்காம் பூண்டும் மருந்திற்காம்
கல்லும் திருக்கோயில் கட்டுதற்காம் — தொல்லுலகில்
ஏழை எளியேன் எதற்காவேன் ? செந்தில் நகர்
வாழும் வடிவேலவா.

— கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணாபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00


கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை


குருவின் பெருமை

விஞ்ஞான உலகத்தில் 'குரு' என்கிற சொல்லே மிக அதிசயமாகக் கேட்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. பாரத நாட்டின் பண்பாடே குரு-சிஷ்ய உறவில் தான் செம்மையாக அஸ்திவாரமிடப் பெற்றது.

அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் குருவின் சொற்படித்தான் தங்களது வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அதனால் எந்தவிதமான மனக் குழப்பமுமில்லாமல் வாழ்க்கையை அவர்களால் எதிர்



கொள்ள முடிந்தது. இன்று, ஒரு துன்பத்தைக் கூடத் தாங்க இயலாமல் மனிதன் துவண்டு போவதைப் பார்க்கும் பொழுது குருவின் மகிமையை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வருவது வழக்கமே. அதை ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்ல ஒரு வழிகாட்டி தேவை. அறிவைத் தெரிந்தவர்களிடம் பெற்றுக் கொள்வது மிக மிக அவசியம்.

பிறப்பு முதல் இறப்பு வரையில், மனித வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டுமென்பதை விஞ்ஞான ரீதியாகக் கற்றுக் கொடுக்க நமக்கென்று ஒரு கல்வி முறையோ, பல்கலைக்கழகமோ இல்லை.

குருவின் பெருமையைச் சிந்திக்கும் பொழுது நாம் நினைவில் கொள்ளவேண்டியது இறைவனின் கருணையைத்தான். 'குரு' என்ற இனிமையான சொல்லுக்கு இருளைப்போக்குகின்றவன், ஒளியைக் காட்டுகின்றவன் என்றெல்லாம் பல பொருள்கள் உண்டு. முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டுமென்றால் உயர்ந்த ஒரு தத்துவத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். குருவைப் பெற்றவன் தன்னையே குருவிடம் அர்ப்பணம் செய்யும்பொழுது, அவனுள் இருக்கின்ற, 'நான்' என்ற அகங்காரம் (இருள்) மறைத்து உயர்ஒளி பிரகாசிக்கின்றது. எல்லா வித்தைகளையும் கற்றுக் கொடுப்பவரே குரு என்று சொல்லமுடியாது. ஆனால் எல்லாக்கலைகளுக்கும், வித்தைகளுக்கும் அடிப்படையாக இருக்கின்ற மெஞ்ஞானத்தை அளிக்கின்ற குருவைத்தான் நாம் 'குரு' என்று அழைக்க முடியும்.

இந்த மெஞ்ஞானத்தை அடைவதற்கு நம்மை நாமே தயார் செய்யவேண்டும். வாழ்க்கையில் எந்தத்துறையில் இருந்

ஆலயங்களில் பிரசாதம் வழங்குவது ஏன்?

"கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலன்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. நாம் ஆலயத்தில் இறைவனை வணங்கும்பொழுது நம் ஐந்து புலன்களும் இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டும். ஐந்து புலன்களும் ஈடுபட்டால்தான் மனம் இறைவன்பால் ஒன்றும். ஆலயத்தில் இறைவனுக்குக் காட்டப்படும் தீபாராதனையை நம் கண்கள் காண்கின்றன. இறைவனைத் தரிசிக்கிறோம். தீபம் காட்டப்படும்பொழுது எழுப்பப்படும் மணியோசை, நாதஸ்வர ஓசை முதலானவற்றை நம் காதுகள் கேட்கின்றன. அங்கு ஏற்றப் படும் ஊதுபத்தி, சாம்பிராணி முதலியவற்றின் நறுமணப் புகையினை நம் நாசிகள் நுகர்கின்றன. கை கூப்பித்தொழுவது, சாஷ்டாங்கமாக வணங்குவது போன்ற செய்கைகளால் மெய்யும் (சரீரம்) இறைவழி பாட்டில் ஈடுபடுகிறது. நான்கு புலன்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இருக்கும்பொழுது, ஐந்தாவது புலனாகிய சுவைப் புலனும் இறைவழி பாட்டில் ஈடுபடவேண்டும் என்பதற்காகத்தான் ஆலயங்களில் பிர சாதம் கொடுக்கிறார்கள். ஐந்து புலன்களும் மனமும் இறைவழிபாட்டில் ஈடுபட்டு இறைவழிபாடு முழுமை பெறுகிறது.

— அள. சித. சொ தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி

தாலும் குரு மகிமையால் மெஞ் ஞானத்தை அடைவது அனை வருக்கும் சாத்தியமே.

நிறைவான உள்ளமும், குறைவான ஆசைகளும் குருவின் ஆசியால் ஒருவனுக்கு ஏற்படு கின்றது. இந்த உலகத்தின் சுபாவத்தைப் புரிந்து கொள்ள விஞ்ஞானம் மிகவும் உதவும்.

இப்போது இருக்கின்ற நிலைமையில் குருவைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என் றாலும் சான்றோர்கள் சொல்லி யிருக்கின்ற பாதையைப் பின் பற்றி நமது வாழ்க்கையை ஒளி மயமாக்குவதற்கு எம்மை ஆட் கொண்ட ஸ்ரீ கொற்றவாளீஸ் வரர் திருநெல்லைத்தாயின் திரு வருளால் அனைவருக்கும் சாத் தியமாகட்டுமென்று வாழ் வாங்கு வாழ வாழ்த்துகிறோம்!.

(சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை யில் 28-10-92 அன்று கோவி லூர் தவத்திரு காசி விஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் வழங்கிய அருளுரை)

பம்பாயில் கூடிமகிழும் விழா

பம்பாய் நகரத்தார் சமு தாயப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக உறுப்பினர்கள் அனைவ ரும் குடும்பத்துடன் கூடிமகிழும் விழா 1-11-92 அன்று அந்தேரி என்ற இடத்தில் உள்ள பவாய் கார்டனில் சிறப்பாக நடைபெற் றது. உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டதோடு போட்டி களிலும் பங்கேற்று மகிழ்ந்தனர்.



திருவொற்றியூர் நகரத்தார் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் (2-10-92) திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தலைமை ஏற்றுப் பேசும் காட்சி. அருகே தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி, திரு எம். எஸ். ஆர்எம். மெய்யப்பன், திரு மெய்யப்பன் மற்றும் நிர்வாகக் குழுவினர்

வானதியின் புத்தக நன்கொடை

தேவகோட்டை நகரத்தார் இளைஞர் முன்னேற்ற சங்கப் படிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு விழா 3–11–92 அன்று கந்தர் சஷ்டி விழா மேடையில் நடைபெற்றது. திரு. எஸ் வி. ஏ. அருணாசலம் செட்டியார் தலைமையேற்றார்.

இவ்விழாவில் கோவிலூர் ஆதீனத் தலைவர் தவத்திரு காசி விஸ்வநாதஞானதேசிகசுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். மதுரையில் 1992 ஆம் ஆண்டின் சிறந்த நகரத்தார் இளைஞராகத் தேர்வு செய்யப்பெற்று விருது பெற்ற வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி இவ்விழாவில் பாராட்டப் பெற்றார். இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் திரு. சுப. மாணிக்கமும் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. மாசாண முத்துவும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவில் சிறப்புரையாற்றிய 'வானதி' திரு. ஏ. திருநாவுக்கரசு தேவகோட்டை நகரத்தார் இளைஞர் முன்னேற்ற சங்கத்திற்கு ரூ. 5000/- மதிப்புள்ள நூல்களை நன்கொடையாக வழங்குவதாக அறிவித்தார்.

அவர் உரையாற்றும்போது இளைஞர்கள் குறிக்கோளுடன் உழைத்தால் வாழ்வில் நிச்சயம் முன்னேறலாம் என்று கூறினார். கவியரசர் கண்ணதாசன், புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணன் ஆகியோருடன் தாம் கொண்டிருந்த நட்பை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து 'நகைச்சுவைப் பேரரசு' திரு. கண. சிற்சபேசன் நடுவர் பொறுப்பேற்க பட்டி மண்டபம் நடைபெற்றது. இறுதியாக சங்க உறுப்பினர்கள் தயாரித்த நடனம், பல குரல், வசனமே இல்லாத நாடகம் ஆகியவை அரங்கேற்றப் பெற்றன.

நடம் புரியும் இடம்

இராமலிங்க அடிகளின் திரு அவதாரம் இந்தத் திருநாட்டுக்குக் கிடைத்த பெரிய பேறு. சாதி, மதம், இனம் என்று பாராமல் அனைவரின் உள்ளத்திலும் கருணையின் கடலையே உருவாக்கி ஜோதி வடிவமாக்க முயன்றவர் வள்ளலார்.

இவ்வுலகத்தில் மனிதன் வாழும்போது அகமும், புறமும் சுத்தமானால் ஒழிய சுத்த சன்மார்க்க விதியைக் கடைபிடிக்க முடியாது. இல்லற வாழ்வில் சுய நலத்திற்காக நாம் செயல்படும் போது அகச்சுத்தி இல்லாமல் தவிக்கின்றோம். புறச்சுத்தி உள்ளதுபோல் நடிக்கின்றோம். இப்படி வாழ்வதனால் நமக்கும், உலகுக்கும் பயன் கிடையாது என்பதை மறந்து விடுகின்றோம். இந்த உலகத்தில் நாம் வாழும் போதே நித்தியமான சுகத்தை அனுபவிக்க முடியுமென்பது சாத்திரங்களின் கூற்று. மகான்களின் அனுபவம். ''இதற்காகவே – இந்த உலகத்தில் கடவுளால் நான் அனுப்பப்பட்டேன்'' என்று மனம் திறந்து சொல்கிறார் அடிகளார்.

இதயக் கோவிலில் இறைவனை நடனமாடச் செய்ய வேண்டியது நமது கடமை. ஆனால் நாமோ வாழ்க்கையின் துன்பங்களால் செம்மையாக வதைக்கப்பட்டு, தாய் வடிவமான இறைவனின் கருணையை



நாச்சியாபுரம் திரு. அ. வயிரவன் என்ற திருஞானம் செட்டியாரின் புதல்வி செல்வி தேனம்மை என்ற சித்ரா B.Sc.க்கும் தேவகோட்டை திரு. அரு. வீர. அண. அண்ணாமலை செட்டியார் புதல்வன் பழநியப்பன் B.Sc. C.A.க்கும் நாச்சியாபுரத்தில் 3-9-92 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மனதில் புகாமல் தடுத்து விடுகின்றோம்.

கருணை வளர வளர இதயத்தில் இறைவனின் நடமாட்டம் அதிகரிக்கின்றது. இறைவன் கருணையின் திருவுருவமே! நம்மை நாம் மாற்றி அமைத்துக் கொள்ளுவதுதான் முக்கியமான வேலை. உலகத்தில் நாம் காட்டும் பற்று, பாசம் போன்றவற்றைக் கடவுள்பால் திருப்ப வேண்டும். அப்போதுதான் இறைவன் நடம் புரியும் இடமாக நம் இதயத்தை மாற்றி அமைக்க முடியும்.

சிந்தனை எப்படியோ அப்படித்தான் மனிதன். சிந்தனைகளை மாற்றியமைப்பதற்கு இறைவனின் நாயங்களுக்கு இருக்கின்ற வலுவை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் வாழுகின்ற இந்தக் காலத்தில் விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது என்றாலும் அதை உருவாக்கிய மனிதன் இன்னும் வளராமல் இருப்பது மிக வருத்தத்திற்கு உரியது. கடவுள் உள்ள கோவிலாக நமது இதயத்தை மாற்றி அமைப்பதற்கு நமக்குப் பிடித்த இஷ்ட தெய்வத்தின் நாமத்தை இயன்ற அளவு மனதில் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். நாமத்தால் தூய்மையடைகின்ற மனது சுய நலத்தை விட்டுவிடுகின்றது. அத்துடன் விருப்பு, வெறுப்பு, 'நான்' என்னும் தன் உணர்ச்சி அனைத்துமே இதயத்தை விட்டு விலகுகின்றது.

கடவுள் நாமத்தைச் சொல்வதால் பக்தி வளர்கின்றது. பக்தி நிறைகின்றபோது கருணை வளர்கின்றது கருணை வளர்கின்றபோது அருட்பெருஞ்ஜோதி உருவமாகின்றது. இப்படிக் கருணையை-இதயத்தில் வளர்த்து எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் - திருநெல்லைத் தாயின் திருவருளால் அனைவரும் தங்களது இதயத்தை பரம் பொருளின் நடம் புரியும் இடமாக அமைத்து உடல் நலனும், மன நலனும் சகல ஐஸ்வர்யங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்!

(கோவிலூர் ஆதீனத்தில் 14-11-92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் கோவிலூர் ஆதீனத் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் அருளிய ஆசியுரை)

பிள்ளையார் நோன்பு!

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் மட்டுமே கொண்டாடப் பெறும் பிள்ளையார் நோன்பு 29-12-92 (மார்கழி மீ 14வ) செவ்வாய்க்கிழமை நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்றான வயிரவன் கோவில் அமைந்திருக்கும் வயிரவன்பட்டியிலும் செட்டிநாட்டு ஊர்களிலும் நகரத்தார் பெருமக்கள் வாழ்ந்துவரும் நகரங்களிலும் கொண்டாடப் பெறவிருக்கிறது.

துணிவே துணை !

கறுப்புக் கண்ணாடியையும் தொப்பியையும் கண்டவர்களுக்குத் 'துணிவே துணை' என்ற தாரக மந்திரமும் அதை ஓதிய திரு. தமிழ்வாணனும் நினைவில் வருவது இயற்கை.

தனக்கென்று ஒரு நிரந்தர வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்டவர் தமிழ்வாணன். Master of All Sulıjects என்று விளம்பரப்படுத்திக் கொண்ட



அவர், உண்மையிலேயே ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தவர். அவரது போதனைகள் பல இளைஞர்களைத் திருத்தி உள்ளன. அவரது சாதனைகள் பலருக்கு வியப்பையும் பொறாமையையும் ஏற்படுத்தி உள்ளன. அவரது வாழ்க்கை பலருக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கு.

ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் சென்னைத் தெருக்களில் அலைந்தவர் தமிழ்வாணன். உடுக்கத் துணியின்றி ஒரு எட்டு முழ வேட்டியை வாங்கி இரண்டாகக் கிழித்து அவரும் அவரது நண்பர் வானதி திரு. திருநாவுக்கரசும் கட்டிக் கொண்ட துண்டு.

காலையில் வெறும் காப்பியே கதி. மதியம் ஒருவேளைச் சாப்பாடு. இரவில் கையில் காசு இருந்தால் வேர்க்கடலை; இல்லையேல் வெறும் பச்சைத் தண்ணீர் தான். இதைவிட வறுமைக்கு எடுத்துக்காட்டு வேறில்லை! இதுவே தமிழ்வாணனின் தொடக்க கால வாழ்க்கை!

கடின உழைப்பு, விடா முயற்சி, துணிவே துணை என்ற தன்னம்பிக்கை ஆகியவை தமிழ்வாணனை உயர்த்தின.

அவர் தினமும் காலையில் நான்கு மணிக்குப் படுக்கையை விட்டு எழுவார். அப்போதே எழுத உட்கார்ந்து விடுவார். ஐம்பத்தொரு ஆண்டு வாழ்க்கையில் அவர் ஐநூறுக்கு மேலான நூல்களை எழுதிச் சாதனை நிகழ்த்தினார். அவர் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கினார்.

தம்மை இழிவாகப் பேசுவோரெல்லாம் வியக்கும்படி வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற வைராக்கியம் அவரது உயர்விற்குத் தலையாய காரணம். கடின உழைப்பு உயர்வைத் தரும் என்ற ஆன்றோர் வாக்கினை மெய்ப்பித்தவர் திரு. தமிழ்வாணன்!

அன்புக்கு நெகிழ்ந்து போகிற நல்ல மனிதர் தமிழ்வாணன். யாருக்காவது துன்பம் என்று அறிந்தால் மனம் வேதனைப்படுவார்.

— வானதி திருநாவுக்கரசு



எனது ஆலய அநுபவங்கள்

வி.என். சிதம்பரம்

— 18 —

திருப்பதி காட்டிய வழி

திருப்பதி தேவஸ்தானம், பக்தர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் அருள்மிகு வெங்கடேசப் பெருமாளுக்கு திருக்கல்யாணம் நடத்திப் பார்க்க விரும்பும் பக்தர்களிடம் உரிய கட்டணத்தைப் பெற்று அவர்கள் குடும்பத்துடன் தரிசிக்கும் வகையில் அத்திருமணத்தை நடத்தி வைக்கிறது.

அடியேன் தக்காராகச் சேவை புரிந்தபோது அதே வழியைப் பின்பற்றி ரூ 501/-ஐ கட்டணமாக நிர்ணயித்து பக்தர்கள் அன்னை மீனாட்சியம்மையின் கல்யாணத்தை உபயமாகச் செய்வித்து, தரிசித்து அம்மன் அருளைப் பெறும்படி செய்தேன்.

தேரோட்ட வரலாறு

அன்னை மீனாட்சியின் தேரோட்டம் முன்பு ஆண்டு தோறும் மாசி மாதத்தில் நடைபெற்றது. அதனால்தான் தேர் சென்ற வீதிகளுக்கு மாசி வீதிகள் என்ற பெயரும் வந்தது. மாசி மாதம் உழவர் பெருமக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்ததால், தேரை இழுக்க ஆயிரக்கணக்கான மக்கள் தேவைப்பட்டனர். எனவே அழகர் ஆற்றில் இறங்குகின்ற மாதமான சித்திரையில் இரு



மதுரை வடக்குமாசி வீதியில் வடக்குக் கிருஷ்ணன் கோவில் அருகே தேர்வரும் காட்சி.

விழாக்களையும் நடத்தினர், மன்னர் திருமலைநாயக்கர். உழவர் பெருமக்கள் விவசாயப் பணிகளை முடித்து நிம்மதியாக திருவிழாவில் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து நிலைசேர்த்தனர்.

காலம் மாறிவிட்ட நிலையில் உழவுத் தொழில் புரிவோருக்குப் பதில், தேரை நான்கு மாசி வீதிகள் வழியாக வடம் பிடித்து இழுத்துவரும் பொறுப்பை மதுரை கோட்ஸ், ஐ. என். டி. யு. சி. தொழிற் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர் பெருமக்களும் அதன் தலைவர்களும் ஏற்று நடத்தி நிலை சேர்த்து விட்டுச் செல்லுவார்கள். அதனால் அவர்கள் ஆலய மரியாதையுடன் கௌரவிக்கப்பட்டு வருகிறார்கள்.

அடியேனும் தேரோட்ட விழாவில் பக்தர்களோடு பக்தனாக கலந்து செல்லும் பெரும் பாக்கியத்தை பெற்றதோடன்றி பக்தர்களின் கோரிக்கைகள், ஆலோசனைகளைக் கேட்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அத்தருணத்தில் பக்தர் ஒருவர் தேரிலுள்ள திரைச் சீலை மிகவும் மங்கியிருப்பதால் அது தேரின் மகிமையைக் குறைப்பதாகக் கூறி அதற்கு ஆதாரமாக பழங்காலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் என்னிடம் காண்பித்தார். அவரது ஆலோசனையைச் சிரமேற்கொண்டு தேரின் திரைச்சீலையை புதிதாக மாற்றினோம்.

தேர் ஓடும்போது டி.வி.எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த ஜீப் தேரைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். தேரிலோ, தேர்ச் சக்கரத்திலோ பழுது ஏற்பட்டால் உடனே அவர்கள் பழுதை நீக்கிச் சீர்படுத்துவார்கள். பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஒருமுறை தேரின் நான்கு சக்கரங்களையுமே மாற்றி

விட்டோம். பக்தர்களின் ஆலோசனைப்படி செயல்பட்டோம்.

கலை உணர்வும் நா உணர்வும்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கு 18-8-90 அன்று யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் எம்போப் அவர்கள் விஜயம் செய்தார்கள்.

ஆலயத்திலுள்ள அபூர்வ சிற்பங்களைக் கண்ணுற்று, ரசித்து வியந்து பாராட்டினார். பின் அவருக்கு ஆலயத்தில் புதுமையான விருந்து கொடுத்தோம். கோவில் பிரசாதத்தோடு, இளநீர், வெள்ளரிப்பிஞ்சு, நொங்கு ஆகியவற்றைக் கொடுத்தோம். சிற்பக் கலைகளைக் கண்டு அவர் எப்படி ரசித்தாரோ அது போல நொங்கை ரசித்து உண்டு விட்டு, ''கண்ணுக்கு விருந்து கொடுத்த நீங்கள் எனது நாவுக்கும் விருந்து கொடுத்தீர்கள்'' என என்னிடம் கூறினார். குறிப்பாக நொங்கு மிக ருசியாக இருந்தது எனப் பாராட்டினார்.

(வளரும்)

சிதம்பரத்தில் கோவிலூர் சுவாமிகள்

கோவிலூர் மரபில் வந்த பொன்னம்பல சுவாமிகளின் குருபூசைக்காக கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் சிதம்பரம் திருமடத்திற்குச் சென்றிருந்தார். தீபாவளியன்று அங்கு குரு பூசை சிறப்பாக நடைபெற்றது.

சிதம்பரத்துல் 28-10-92 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையின் தலைவர் டாக்டர் ஆறு அழகப்பன் அவர்களது தலைமையில் சுவாமிகள் ''குருவின் மகிமை'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து திரு. பிரம்மச்சாரி அத்யாத்ம சைதன்ய (கோவிலூர் மடம்) ''சிக்கலும் தீர்வும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

டாக்டர். ஆறு. அழகப்பன் அவர்கள் சுவாமிகளை சபைக்கு அறிமுகப்படுத்தினர். மாணவர்கள் சுவாமிகளின் ஆசியினை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

இராமாயணம் தொடர் சொற்பொழிவு

கண்டனூர் செல்லாயி அம்மன் கோவிலில் நவராத்திரியை முன்னிட்டு பொற்கிழிக் கவிஞர், காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் அவர்கள் 27-9-92 முதல் 5-10-92 முடிய ஒன்பது நாட்கள் இராமாயணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். திரு. எஸ் வி. இராமையா செட்டியார் தலைமை தாங்கிக் கவிஞருக்குப் பூமாலை சூட்டினர்கள். பேராசிரியர் திரு. அர. சிங்காரவடிவேலன் விழாவினைத் தொடங்கி வைத்தார். விழா உபயம் செய்யும் கு. தெ. அரு. குடும்பத்தின் சார்பில் திரு. ஆவுடையப்பன் வரவேற்று நன்றி கூறினர். விழாவிற்கு ஏராளமான மக்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

தமிழ்வாணன் எனும் இமயம்

O திரு. தமிழ்வாணனின் இயற்பெயர் 'இராமநாதன்' என்பதாகும்.

O திரு. லெட்சுமணன் செட்டியார்-பிச்சம்மை ஆச்சியின் ஐந்தாவது குழந்தையாக, நான்கு சகோதரர்களுடனும், நான்கு சகோதரிகளுடனும் பிறந்தவர் திரு தமிழ்வாணன்.

O இவர் மாத்தூர்க் கோவில் மணலூர் பிரிவைச் சேர்ந்தவர்.

O அமராவதிபுதூர் திரு பிச்சப்பா சுப்பிரமணியம் - திருமதி அழகம்மை ஆச்சியின் புதல்வி திருமதி மணிமேகலையை 1951 ஆம் ஆண்டு திரு. தமிழ்வாணன் மணம் செய்து கொண்டார். அவர்களுக்கு லெட்சுமணன் (லேனா தமிழ்வாணன்), ரவி என்கிற இரண்டு ஆண் மக்களும், லெட்சுமி, சகுந்தலா என்கிற இரண்டு பெண் மக்களும் உள்ளனர்.

O கம்பம் பக்கத்தில் உள்ள 'மோகனூர்' என்ற ஊரில் தமிழ்வாணனின் தந்தையார் வட்டிக் கடை நடத்தி வந்ததால் தேவகோட்டையில் இவர்களது வீட்டுக்கு 'மோகனூரார் வீடு' என்ற அடையாளப் பெயர் வழங்கி வருகிறது.


O தற்போது அவரது புதல்வர்கள் தேவகோட்டையில் தந்தையாரின் நினைவாக 'தமிழ்வாணன் இல்லம்' என்ற பெயரில் ஒரு வீடும், மதுராந்தகத்தில் 'தமிழ்வாணன் பண்ணை' என்ற



முன்னாள் தமிழக முதல்வர்கள் பெருந்தலைவர் திரு கே. காமராஜர் திரு எம். பக்தவத்சலம் ஆகியோருடன் புரட்சி எழுத்தாளர் திரு. தமிழ்வாணன் இருக்கிறார்.

பெயரில் ஒரு தோட்டமும் வாங்கியிருக்கின்றார்கள்.

O மோகனூரைச் சேர்ந்த திரு. கி. வ. ஜகந்நாதன் தமிழ்வாணனின் எழுத்தாற்றல் கண்டு சக்தி திரு வை. கோவிந்தனிடம் அவரை அறிமுகம் செய்து வைத்தார். சக்தி வை. கோவிந்தன் ''அணில்'' பத்திரிகையில் திரு. தமிழ்வாணனை ஆசிரியராக நியமித்தார்.



இளம் வயதில் திரு. தமிழ்வாணன்.

O இவர் 1948ல் ''கல்கண்டு'' வார இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

O தேவகோட்டை நகரத்தார் பள்ளியில் திரு தமிழ்வாணன் எஸ். எஸ். எல். சி. வரை மட்டுமே படித்திருந்தும் சென்னை சென்றதும் சித்தா, ஆயுர்வேதி, யுனானி, ஹோமியோபதி போன்றவைகளைக் கற்று தனித்தனியே டாக்டர் பட்டம் பெற்றிருக்கின்றார்.


O இவரது திருமணம் பற்றிய விளம்பரம் ''கல்கண்டு'' இதழில் வெளியானதும் அண்ணாவுக்குக் கல்யாணம் என்ற ஆவலில் வாசகர் கும்பல் அமராவதி புதூருக்குப் படையெடுத்ததாம்!

O வானதி திருநாவுக்கரசு அவர்களுடன் சேர்ந்து ஜில் ஜில் பதிப்பகத்தைத் தொடங்கிய இவர் 1957ல் தனியாக தனது துணைவியார் பெயரில் மணிமேகலைப் பிரசுரத்தைத் தொடங்கினார்

O தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களிடம் புனைப்பெயர் பற்றியும் 'வாணன்' என்பதன் பொருள் பற்றியும் அவர் கேட்டபோது, அவர்கள் 'வாணன்' என்றால் 'வாழ்பவன்' என்பது பொருள் என்றும், ''நீ தமிழுக்காக வாழ்வதால் 'தமிழ்வாணன்' என்ற புனைப்பெயரை வைத்துக்கொள்'' என்றும் சொன்னார்களாம். அப்போதே அவர் 'தமிழ்வாணன்'. என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்.

O இன்று வரை எந்த ஒரு பதிப்பகத்திற்கும் இல்லாத சிறப்பு மணிமேகலைப் பிரசுரத்திற்கு உண்டு. தமது வாழ்நாளில் 1957 முதல் 1977 வரை சுமார் 20 ஆண்டுக் காலங்களில் தாம் எழுதிய 500 நூல்களில் 470 நூல்களை வெளியிட்டு (பிறரது நூல்களில் ஒன்று கூட

தமிழ்வாணனின் குடும்பம்



நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தில் (இடமிருந்து வலமாக) திருமதி மணிமேகலை ஆச்சி மருமகள் திருமதி வள்ளி – புதல்வன் திரு. ரவி தமிழ்வாணன், மேலே – மூத்த மாப் பிள்ளை திரு. முருகப்பன், மூத்த மகள் திருமதி லட்சுமி, மருமகள் திருமதி ஜெயம் லேனா, புதல்வன் திரு. லேனா தமிழ்வாணன் இளைய மாப்பிள்ளை திரு. முருகப்பன் இளைய மகள் திருமதி சகுந்தலா (திரு. ரவி தமிழ்வாணனின் திருமணத்தின்போது எடுக்கப் பெற்ற படம் இது.)

வெளியிடாது) சாதனை படைத் தவர் திரு. தமிழ்வாணன்.

O அவரது மறைவுக்குப் பின்னர் அதே கொள்கையைப் பின்பற்றி தமிழ்வாணன், லேனாதமிழ்வாணன், மற்றும் ஆசிரியர் குழு நூல்கள் என்ற வகையில் இன்றுவரை சுமார் 1400 நூல்களை வெளியிட்டுள்ள ஒரே பதிப்பகம் மணிமேகலைப் பிரசுரமாகும்.

O கானன் டாயல் என்பவர் ''ஹெர்லாக் ஹோம்ஸ்'' என்ற துப்பறிவாளனைப் படைத்தது போல் திரு. தமிழ்வாணன் 'சங்கர்லால்' என்ற பாத்திரத் படைத்து சுமார் 42 துப்பறியும் நாவல்களை எழுதியுள்ளார்.

O சென்னைத் தொலைக் காட்சியில் 1-11-92 முதல்ஞாயிறு தோறும் காலையில் திரு. தமிழ் வாணனின் 'சங்கர்லால் துப்பறி

கிறார்' என்கிற தொடர் ஒளி பரப்பப்பட்டு வருகிறது.

O சங்கர்லால் துப்பறிவது மட்டுமில்லாமல் ''தமிழ்வாணன் துப்பறியும் தமிழ் நாவல்கள்'' என்ற பெயரில் மூன்று நாவல் களை அவர் எழுதியுள்ளார். எழுத்தாளரே துப்பறிவது போல் எழுதியுள்ளது தமிழில் புதிய முயற்சியும் சாதனையுமாகும்.

O திரு. தமிழ்வாணனின் எழுத்தாற்றலுக்குத் தூண்டு கோலாகவும், விமர்சகராகவும் இருந்த அவரது துணைவியார் திருமதி மணிமேகலை ஆச்சி எழுதிய ''உருகுது நெஞ்சம்; பெருகுது கண்ணீர்'' என்றகதை ''கல்கண்டு'' இதழிலேயே தொடராக வந்துள்ளது.

O பத்திரிகைக்கு எழுதினால்தான் 'பாக்கெட் மணி' தருவேன் என்ற அளவில் தம் புதல்வர் திரு. லேனா'வை எழுத்துத் துறைக்கு தம் வாரிசாகக் கொண்டு வந்த பெருமை திரு. தமிழ்வாணனையே சாரும்.

O ஜெய்சங்கர் நடித்த ''காதலிக்க வாங்க'' என்ற தமிழ்ப் படத்தைத் திரு. தமிழ் வாணன் தயாரித்தார். தவிரவும் தெலுங்கிலிருந்து பதினொரு படங்களை வாங்கி தமிழில் மொழி மாற்றம் செய்தும் வெளி யிட்டார்.

O EXPO – 70இல் கலந்து கொள்ள ஜப்பானுக்கும், மற்றும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் அவர் சென்று வந்தார்.

O கூலிங் கிளாசை முதலில் பயன்படுத்திய பெருமை திரு. தமிழ்வாணனையே சாரும். அவ ருக்குப் பின்னரே மூதறிஞர் ராஜாஜி, கலைஞர், மற்றும் எம். ஜி. ஆர் ஆகியோர் பயன் படுத்தத் தொடங்கினர்.

O திரு. தமிழ்வாணன் பயன்படுத்தி வந்தது போன்ற தொப்பியை எம். ஜி ஆர். அவர் களும் பயன்படுத்தத் துவங்கிய தால் Expo - 70 க்கு ஜப்பான் சென்று திரும்பிய பின்னர் திரு. தமிழ்வாணன் ஆங்கிலேயரைப் போன்ற தொப்பியை அணியத் தொடங்கினார்.

O ஒரு கடிதத்தின் முகவரிப் பகுதியில் கறுப்புக் கண்ணாடி, தொப்பி இரண்டையும் மட்டும் வரைந்து அஞ்சலில் சேர்த்து விட்டால் இப்பொழுதும் அந்தக் கடிதம் ''கல்கண்டு'' பத்திரிகை அலுவலகத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றது என்றால் அது ஆச்சர்யமான விஷயம் தானே!

O திரு தமிழ்வாணன் 22-5-1926 ல் பிறந்து 10-11-1977ல் இயற்கை எய்தி னார். அவர் வாழ்ந்தது 51 ஆண் டுகள் 5 மாதங்கள் 18 நாட்கள்.

புரட்சி எழுத்தாளர் திரு தமிழ்வாணன் பற்றிய இச் செய்தி களை அவரது புதல்வர் திரு. லேனா தமிழ்வாணனிடமிருந்து சேகரித்து வழங்கியவர் :

வீர சின்னஅருணாசலம் B. Com (M.A)
தேவகோட்டை

அன்புச் சகோதரர்கள்


— எல். சுந்தரம் —

திரு. தமிழ்வாணனை நான், மதுரையில் இரண்டு முறை சந்தித்திருக்கிறேன். ஆனால் அவருடன் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை.

நான் ''தமிழ்நாடு'' வார இதழில் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அதன் ஆசிரியர் கருமுத்து திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்களின் சொல்படி தொடர்கதை கேட்டு திரு. தமிழ்வாணனுக்குக் கடிதம் எழுதினேன். அவர் ஒரு வாரத்திற்குள் கடிதத்துடன் சுமார் 200 பக்கங்கள் கொண்ட தொடர் கதையை டைப் செய்து அனுப்பியிருந்தார். (அதன் தலைப்பு ''கருகிய முகம்'' என்பதாகும்.) அவரது சுறுசுறுப்பையும் எழுத் தாற்றலையும் கண்டு அன்றே நான் வியந்து போனேன்.

திரு. தமிழ்வாணனின் நட்புக் கிடைக்கவில்லையே என்ற என் மனக்குறையைப் போக்கத்தான் ஆண்டவன் அவருடைய அருமைப் பிள்ளைகளான திரு லேனா தமிழ்வாணன் திரு. ரவி தமிழ்வாணன் ஆகியோருடன் பேச, பழக, நட்பு ஏற்படுத்திக் கொள்ள எனக்கு வாய்ப்புத் தந்திருக்கிறான் போலும்!

எல்லாப் பெற்றோருக்கும் நல்ல பிள்ளைகள் வாய்ப்பார்கள் என்று



திரு. தமிழ்வாணனின் பெயரையும் புகழையும் நிலை நிறுத்தி வரும் அவரது அருமைப் புதல்வர்கள் திரு. லேனா தமிழ்வாணனும் திரு. ரவி தமிழ்வாணனும்.

சொல்லுவதற்கில்லை. ஆனால் திரு. தமிழ்வாணன் - திருமதி மணி மேகலை ஆச்சியைப் பொறுத்தவரை புடம் போட்ட தங்கமாக அவர்களுக்குப் பிள்ளைகள் வாய்த்திருக்கிறார்கள்.

திரு. லேனாவை எனக்கு அறிமுகம் இல்லாத நேரத்தில் அவருக்கு 1981ல் என் புதல்வியின் திருமண அழைப்பை அனுப்பியிருந்தேன். அவர் வாழ்த்து அனுப்பியிருந்தார். 1982ல் ''நகரத்தார் குரல்'' தொடங்கியதிலிருந்து இன்று வரை நான் அவருக்கு அலுவலக ரீதியாகவும் சொந்தமாகவும் ஏராளமான கடிதங்களை எழுதியிருக்கி றேன்; எழுதியும் வருகிறேன். அவைகளுக்கு அவர் உடனுக்குடன் பதில் எழுதி வருகிறார். 1982 முதல் இதுவரை திரு. லேனா எனக்கு 155 கடிதங்கள் எழுதியிருக்கிறார். இவ்வளவு கடிதங்களை எனக்கு வேறு யாரும் எழுதியதில்லை! திரு. ரவியும் எனக்கு அவ்வப்போது கடிதம் எழுதி வருகிறார்.

என் இரண்டாவது புதல்வனது திருமணம் 22-11-90 அன்று அலவாக்கோட்டையில் நிகழ்ந்தது. அதில் தாங்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டுமென்று என் உடன் பிறவாச் சகோதரர் திரு. லேனாவுக்கு எழுதி அழைப்பிதழும் அனுப்பினேன். அவரும் வருவதாக ஒப்புக்கொண்டு அதன்படி திருமணத்தில் தன் துணைவியார் திருமதி ஜெயம் லேனா, புதல்வன் அரசு ஆகியோருடன் கலந்து கொண்டு 45 நிமிடங்கள் மிக அருமையாக - நகைச்சுவை ததும்ப வாழ்த்துரை வழங்கினார் எவ்வளவோ பணிகளுக்கிடையில் சென்னை யிலிருந்து தன் குடும்பத்தாருடன் அவர் அங்கு வந்து என்னையும் என் குடும்பத்தவரையும் பெருமைப்படுத்தியதை என் வாழ்வில் நான் என்றும் மறக்க மாட்டேன். இதில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் : என் கடிதம் கிடைத்தவுடன் அவர் உடனடியாக இரயிலில் டிக்கெட் ரிசர்வ் செய்து அதன் ஃபோட்டோ ஸ்டெட் காப்பியை மறுநாளே எனக்கு அனுப்பி திருமணத்திற்கு தன் வருகையை உறுதிப் படுத்தியது தான்! திருமணங்களுக்குப் போனால் நமக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறவர்கள் நிறைந்த இந்நாளில் தனக்கு ஏற்பட்ட போக்குவரத்துச் செலவைக் கூட வாங்கிக் கொள்ள மறுத்த உள்ளம் திரு. லேனாவுடையது. அது மிக மிக உயர்ந்தது.

அன்புச் சகோதரர்களான திரு. லேனா, திரு. ரவியுடைய அன்பு அடக்கம், பணிவு, பிறரை மதிக்கும் பண்பு, திட்டமிட்டுச் செய லாற்றும் முறை போன்றவை என்னைக் கவர்ந்தவையாகும்.

''காபி சாப்பிடக் கூடாது; சிகரெட் தீங்கு செய்யும்'' என் றெல்லாம் தமிழ்வாணன் எழுதுவார். உடனே தானே சிகரெட் பற்ற வைப்பார். ''சிகரெட் பற்ற வைத்தால்தான் துணிவு வரும்'' என்பார். வேடிக்கையான மனிதர்!

— வானதி திருநாவுக்கரசு

தமிழ்வாணன் பற்றி கண்ணதாசன்

1946ல் நானும் தமிழ்வாணனும் ''சக்தி'' அலுவலகத்தில் ஒன்ருகப் பணியாற்றிேேம். அவர் ''அணில்'' என்ற குழந்தைகள் பத்திரிகையின் ஆசிரியர். நான் ''திரை ஒலி'' என்கிற சினிமாப் பத்திரிகையின் ஆசிரியர். நானும் தமிழ்வாணனும் முக்காலணு டீயிலும் பொறை பிஸ்கட்டிலும் வாழ்க்கை நடத்திய காலம் அது.

அப்படி வாழ்ந்திருந்தும் அவரது கேள்வி-பதில் மூலம் சில அபிப்பிராய பேதங்கள் எங்களுக்குள் ஏற்பட்டன. அதனுல்தான் நானும் கொஞ்சம் எழுத வேண்டி வந்தது. ஆயினும் இவ்வளவு இளம்வயதில் அவரது மரணத்தை நான் கனவிலும் கூடக் கருதியதில்லை.

பத்திரிகை என்பது பலரது கூட்டுறவுச் சாதனை. எனக்குத் தெரிந்தவரை ''கல்கி''க்குப் பிறகு ''கல்கண்டு'' ஒன்றுதான் தனி மனிதரின் சாதனை.

துரதிருஷ்டவசமாக மரணம் அவரைக் கைக் கொண்டு விட்டது. வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மாரடைப்பு நோய் இன்று பல உயிர்களைக் காவு கொள்வதை மருத்துவர்கள் சிந்திக்க வேண்டும். நவீன வாழ்க்கை முறையில் எந்தத் தவறு இதற்குக் காரணம் என்பதைச் சரியாகச் சொல்ல வேண்டும்.

நானும் தமிழ்வாணனும் ஒரே சமுகத்தில் பிறந்தோம். அந்த வட்டித் தொழில் சமூகத்



கவியரசர் கண்ணதாசனும் புரட்சி எழுத்தாளர் தமிழ்வாணனும். இருவரும் 1926ல் பிறந்தவர்கள்; மாத்தூர்க் கோவிலைச் சேர்ந்தவர்கள்.

தில் இலக்கியத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நாங்கள் முன்னேறினோம். ஆதி சங்கரருக்கு இறைவன் வரமளித்தது போல 'நிறைந்த திறமை; குறுகிய ஆயுள்' என்று தமிழ்வாணனுக்கும் வரமளித்தார் போலும்!

எந்த அபிப்பிராய பேதங்களையும் அண்மைக் காலங்களில் பொருட்படுத்தாத நான், தமிழ்வாணனின் கடைசிக் காலத்தில் பேதப்பட நேர்ந்ததே என்பதை எண்ணி, வருந்தாமல் இருக்க முடியவில்லை.

தந்தை, தாய், மகன் பத்திரிகை ஆசிரியர்கள்!

"கல்கண்டு" இதழின் ஆசிரியராக திரு. தமிழ்வாணனும் "திருவருள்" பத்திரிகையின் ஆசிரியராக திருமதி தமிழ்வாணனும் பணியாற்றியிருக்கிறார்கள். திரு. தமிழ்வாணனுக்குப் பிறகு இப்போது அவரது புதல்வர் திரு. லேனா தமிழ்வாணன் "கல்கண்டு" இதழின் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் எம். ஏ. பட்டதாரி மட்டுமல்ல; பத்திரிகைத் துறைக்கென படித்து 'டிப்ளமா' பெற்றவர். ஒரே குடும்பத்தில் தந்தை, தாய், மகன் ஆகியோர் பத்திரிகை ஆசிரியர்களாகப் பொறுப்பு வகிப்பது அபூர்வமான விஷயம்!

லேனா தமிழ்வாணனும் "நகரத்தார் குர"லும்!

"கல்கண்டு" இதழின் இப்போதைய ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் "நகரத்தார் குரல்" கிடைத்தவுடன் அப்போதைக்கப்போது படித்து முடித்து விடுகிறார். அத்துடன் அவைகளைச் சேகரித்து 6 மாதங்களுக்கு ஒன்று வீதம் 'பைண்டு' செய்து வைத்துக் கொள்கிறார். "குர"லில் வரும் செய்திகளையும் கட்டுரைகளையும் பாராட்டும் அவர், அதை "வீசைக்குப் போடப்படாத பத்திரிகை" என அடிக்கடி குறிப்பிடுகிறார்.

தனக்கு முக்கியமான வேலையிருக்கும்போது வீட்டிற்கு வந்து வெட்டியாகப் பேசிக் கொண்டிருப்பவர்களைக் கழற்றி விட திரு. தமிழ்வாணன் -

"எனக்கு வேலையிருக்கிறது! உங்களுக்கு ...?"

என்று எழுதப்பட்ட பலகையைத் தம் மேசையின் மீது வைத்திருப்பாராம்!

- வி. ஆர். சின்ன அருணாசலம்
தேவகோட்டை


திரு. தமிழ்வாணன் தம்முடன் தம் புதல்வர்களையும் வெளியார் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்வாராம். "ஏன் இப்படி ஒன்று விடாமல் கலந்து கொள்ளுகிறீர்கள்?" என்று அவர்கள் தந்தையாரிடம் கேட்டபோது "இதன் மூலம் அவர்களுக்கு நாம் தரக்கூடிய மகிழ்ச்சியை அல்லது ஆறுதலை வேறு எந்த உதவியின் மூலமும் தந்துவிட முடியாது" என்றாராம்!

- வி. ஆர். சின்ன அருணாசலம்
தேவகோட்டை

பிள்ளையார்பட்டியில் குட நீராட்டு விழா

நகரக் கோவில்கள் ஒன்பதில் ஒன்ருன பிள்ளையார்பட்டி அருள் மிகு கற்பக விநாயகர் திருக் கோவிலின் திருக்குட நன்னீ ராட்டு விழா 8-11-92 ஞாயி றன்று காலை சரியாக 9-50 மணிக்குச் சிறப்பாக நடை பெற்றது.

குடநீராட்டை யொட்டி 1–11—92 ஞாயிறு காலை அனுக்கை விக்னேஸ்வர பூஜை, தனபூஜை ஆகியவையும்



2-11-92 திங்கள் காலை கணபதி ஹோமமும் 3–11-92 செவ்வாய் காலை நவக்கிரஹ ஹோமமும் நடைபெற்றன.

4-11-92 புதன் மாலை தொடங்கி 8–11-92 அதிகாலை வரை எட்டுக் காலம் யாக சாலைப் பூஜைகள் நடைபெற்றன. கோவில் வளாகத்தில் 5 யாக சாலைகள் அமைக்கப் பெற்றிருந் தன அவற்றில் கற்பக விநாயகர் யாகசாலை முக்கியமானதாகும். கற்பக விநாயகர் திருக்கோவிலைச் சேர்ந்த டாக்டர் திரு. கே. பிச்சைக் குருக்கள் தலைமையில் 150க்கு மேற்பட்ட சிவாச்சாரி யார்கள் யாகசாலைப் பூஜைகளைச் சிறப்பாக நடத்தினர். சிங்கப்பூர், இலங்கை போன்ற வெளிநாடு களிலிருந்தும் சிவாச்சாரியார்கள் வரவழைக்கப் பெற்றனர். யாக சாலைப் பூஜைகள் ஆகம விதிப்படி நடைபெற்றன.

குடநீராட்டு விழாவிற்காக கங்கை, யமுனை, கோதாவரி, காவிரி போன்ற புண்ணிய நதி களிலிருந்து புனித நீர் கொண்டு வரப் பெற்றது. இரண்டு ராஜ கோபுரங்கள், மற்றும் 16 விமானங்களுக்கும் வேத கோஷம் முழங்க, நாதஸ்வரம் ஒலிக்க ஒரே நேரத்தில் குட நீராட்டு நடைபெற்றது.

குட நீராட்டு விழாவில் தமிழக அமைச்சர்கள் திரு. எஸ். கண்ணப்பன். திரு. எஸ். ரகுபதி, இந்திரகுமாரி, முன்னுள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம பரம் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஏஆர். லெட்சு மணன், தவத்திரு குன்றக்குடி அடிகளார், வருமானவரி ஆணை யாளர் திரு. எஸ். பாபு மடாதி பதிகள், சட்டமன்ற உறுப்பினர் கள் ஆகியோர் கலந்து கொண் டனர்

இக்குடநீராட்டு விழாவை சுமார் 5 இலட்சத்திலிருந்து 6 இலட்சம் பேர்வரை கண்டு களித் திருப்பதாக மதிப்பிடப் பெற்றுள்ளது

குடநீராட்டு விழாவன்று மாலையில் மகாஅபிஷேகமும் இரவு



சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்.டின் பொன் விழா நிகழ்ச்சிகள் 30–10–92 அன்று கோவையில் நடைபெற்றபோது பொன் விழா மலரை குமார ராணி திருமதி மீனா முத்தையா அவர்கள் வெளியிட தொழிலதிபர் எஸ். வி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பெற்றுக் கொள்ளும் காட்சி. இடது புறம் சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்.டின் பொது மேலாளர் திரு. சபா. சிங்காரம்.



கோவையில் நடைபெற்ற சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்.டின் பொன் விழாவில் (இ–வ) திருமதி சிகப்பி இராமசாமி, துணைவேந்தர் திரு. டி. சி. மோகன், தொழிலதிபர் திரு. ஜி. எஸ். கேசவமூர்த்தி, டாக்டர் திரு. எம். ஏ. எம். இராமசாமி, திருமதி கேசவமூர்த்தி, குமார ராணி திருமதி மீனா முத்தையா உள்ளனர்.

பஞ்சமூர்த்தி தீபாராதனைகளும் பஞ்சமூர்த்தி திருவுலாவும் சிறப்பாக நிகழ்ந்தன.

குடநீராட்டு நிகழ்ச்சியை மதுரை வானொலி நிலையத்தார் நேரடியாக ஒலிபரப்புச் செய்தனர். பேராசிரியை திருமதி சரஸ்வதி இராமநாதன் திரு. ஜெயம்கொண்டான் போன்றவர்கள் நேர்முக வர்ணனை செய்தனர்.

பக்தர்கள் சிரமமில்லாமல் குட நீராட்டைக் கண்டு களிக்கும் வகையில் கோவிலைச் சுற்றி தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பெற்று நேரடியாக ஒளி பரப்பப் பெற்றது.


போக்குவரத்து ஏற்பாடுகளை அரசுப் போக்குவரத்து கழகங்கள் சிறப்பாகச் செய்து உதவின. மதுரை சரக போலீஸ் டி.ஐ.ஜி. திரு. எஸ். வி. வெங்கட கிருஷ்ணன் மேற்பார்வையில் சுமார் 750 போலீசார் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

எல்லாவற்றிலும் மிக முக்கியமாக பெரிய அளவில் 5 கூரைக் கொட்டகைகள் அமைத்து பல நாட்களாக வேளா வேளைக்கு இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு இலவசமாக அறுசுவை உணவு வழங்கியதைப் பாராட்டியே ஆக வேண்டும்.

குடநீராட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை காரியக்காரர்கள் பூலாங்குறிச்சி திரு. ஆர்எம். பி. ஆர்எம். பி. வி. முத்தையா செட்டியார், காரைக்குடி திரு. ஆதப்ப செட்டியார், நற்சாந்துபட்டி திரு. கும. பெரி. அழகப்ப செட்டியார், காரைக்குடி திரு சபாபதி செட்டியார் ஆகியோர் சிறப்புறச் செய்திருந்தனர்.

இந்த அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலில் ஏற்கனவே 22-1-1899, 10-2-1928 10-2-1951, 10-9-1976 ஆகிய தேதிகளில் குடநீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

இந்தப் பிள்ளையார்பட்டிக் கோவில் கி.பி 615-668க்கு இடைப்பட்ட காலத்தில் முதலாம் மகேந்திரவர்மனால் கட்டப் பெற்று கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நகரத்தார் சமூகத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளதாக வரலாறு கூறுகிறது.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ குருவிக்கொண்டான்பட்டி அருகே உள்ள கீரணிப்பட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோவிலின் குட நீராட்டு விழா தை மீ 16உ (29—1—93) நடைபெற உள்ளது.

ஃ ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி விழா 24-12-92 அன்று தொடங்குகிறது. (4-1-93 அன்று வைகுண்ட ஏகாதசி.)

ஃ பழம்நீ திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் தமது 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவை 14—11—92 அன்று மிக எளிய முறையில் கொண்டாடினார். பல பெரியவர்கள் கலந்து கொண்டு ஆசி வழங்கினர்.

ஃ மதுரை நகர விடுதியின் புதிய கட்டிடத்தில் 4—11—92 அன்று கணபதி ஹோமம் நடத்தப் பெற்று புதுமனை புகு விழா சிறப்பாக நடந்தேறியது. அன்று முதல் நகரத்தார் சங்க அலுவலகம் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

ஃ கோவிலூர் ஆதீனத்தில் 12—12—92 அன்று நடைபெற உள்ள சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் ''சிதம்பரம்'' என்ற தலைப்பில் பேராசிரியர் டாக்டர் திரு. ச. மெய்யப்பன் உரை நிகழ்த்தவிருக்கிறார்.

ஃ கோவிலூர் சுவாமிகள் 1-12-92 முதல் 10-12-92 வரை திருவண்ணாமலை ஈசான்ய மடத்தில் தங்கவிருக்கிறார்கள். 8-12—92 செவ்வாயன்று திருக்கார்த்திகை தீபத்தைத் தெரிசிக்கிறார்கள்.

ஃ ஆத்தங்குடி நகரச் சிவன் கோவில் குட நீராட்டு மலர் வெளியீட்டு விழா 14—11—92 அன்று ஆத்தங்குடியில் நடைபெற்றது.

ஃ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் 70 ஆவது பிறந்த தின விழா 7-11-92 அன்று கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் பள்ளிக் கலையரங்கில் கொண்டாடப் பெற்றது.

ஃ வயிரவன் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பாக நகர வயிரவன்பட்டியில் உள்ள நகர விடுதியில் 7-11-92 அன்று பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஃ வயிரவன் கோவிலில் சம்பா சஷ்டித் திருவிழா 30-11-92 திங்கள் இரவு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்வாணனின் சிந்தனைகள்

ஃ நாம் கடவுளை உள்ளன்போடு வணங்க வேண்டும். கைமாறு கருதி கடவுளை வணங்கினுல் அது வியாபாரமாகி விடும். தண்டனைக்கு அஞ்சிக் கடவுளை வணங்கினுல் அது அடிமைப் புத்தி ஆகும்.

ஃ மனிதன் சாகாத வாழ்வைப் பெற மூன்று மகா மந்திரங்களைப் போதித்தார் வள்ளலார். அவை: பசித்திரு; தனித்திரு; விழித்திரு என்பனவாகும்.

ஃ சுருக்கெழுத்தும் ரேகையும், படித்தவனுக்குத்தான் தெரியும். மற்றவனுக்கு அவை கோடாகத்தான் தெரியும். அது போல கோவிலில் இருக்கும் விக்கிரகம் பக்தியுடையவனுக்குத் தெய்வமாகத் தெரியும்; மற்றவனுக்குக் கல்லாகக் தெரியும்.

ஃ வீடுகளில் ஞானிகள், அறிஞர்கள், தெய்வங்களின் படங்களை மாட்ட வேண்டுமே தவிர சினிமாப் படங்களை மாட்டக் கூடாது.

நன்றி: ''திருவருள்''

இயற்பகை நாயனர் திருவிழா

காவிரிப்பூம்பட்டினம் திருச்சாய்க்காடு என்னும் சாயாவனத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலில் இல்லையே என்னாத இயற்பகை நாயனார் திருவிழா 14-12-92 முதல் 18-12-92 முடிய நடைபெற உள்ளது.

14-12-92 (கார்த்திகை மீ 29உ) 1 ஆம் திருநாள் அனுச்ஞை பூஜை, விநாயகர் வழிபாடு இயற்பகை நாயனார் திருஅவதாரம்

15-12-92 2 ஆம் திருநாள். இயற்பகைநாயனார் கற்பினுக்கு அரசியாரின் திருமணத் திருக்கோலம். இரவு முத்துப்பல்லக்கிப் திருவீதி உலா.

16-12-92 3 ஆம் திருநாள். காலை பஞ்ச மூர்த்திகள் அபிஷேகம். பகல் உத்திர நட்சத்திரத்தில் இயற்பகை நாயனர் குருபூஜை

17-12-92 4 ஆம் திருநாள். ஐராவத திருக்குளத்தில் தீர்த்தம் கொடுத்தல்.

18-12-92 5 ஆம் திருநாள். விடையாற்றி.

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி



சுப. மீனாட்சி ஆச்சி

தோற்றம் : 7-7-1925

மறைவு : 9-12-1988

நினைப்பதும் மறப்பதும் இலா நெஞ்சினர்

சாத்தப்பா சுப்பிரமணியம் குடும்பத்தினர்

S. SP குரூப் நிறுவனங்கள்

உ

ஸ்ரீகற்பக விநாயகர் சகாயம் — ஓம் ஸ்ரீ ஐயப்பன் துணை

சுபம்

டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

சபரிமலைப் பிரயாண விபரம்

9-12-92	to	11-12-92		3 நாள்	ரூ. 360/-
9-12-92	to	12-12-92	குருவாயூர் வழி	4 ,,	ரூ 470/-
12-12-92	to	14-12-92	செங். வழி	3 ,,	ரூ. 360/-
15-12-92	to	17-12-92		3 ,,	ரூ. 360,-
15 12-92	to	18-12-92	திருச்செந்தூர் வழி	4 ,,	ரூ. 470/-
15-12-92	to	18-12-92	அம்பலப்புழை வழி	4 ,,	ரூ. 470/-
18-12-92	to	20-12-92		3 ,,	ரூ. 360/-
19-12-92	to	22-12-92	குருவாயூர் வழி	4 ,,	ரூ. 470/-
19-12-92	to	22-12-92	அம்பலப்புழை வழி	4 ,,	ரூ. 470/-
21-12-92	to	23-12-92		3 ,,	ரூ. 360/-
23-12-92	to	26-12-92	குருவாயூர் வழி	4 ,,	ரூ. 470/-
23-12-92	to	26-12-92	திருச்செந்தூர் வழி	4 ,,	ரூ. 470/-
24 12-92	to	26-12-92		3 ,,	ரூ. 360/-
29-12-92	to	3- 1-93	ஸ்ரீ மூகாம்பிகை வழி	6 ,,	ரூ. 725/-
31-12-92	to	3- 1-93	குருவாயூர் வழி	4 ,,	ரூ. 470/-
1- 1-93	to	3- 1-93		3 ,,	ரூ. 360/-
1- 1-93	to	4- 1-93	பெரியபாதை	4 ,,	ரூ. 470/-
4- 1-93	to	6- 1-93		3 ,,	ரூ. 360/-
4- 1-93	to	7- 1-93	குருவாயூர் வழி	4 ,,	ரூ 470/-
5- 1-93	to	8- 1 93	பெரியபாதை	4 ,,	ரூ. 470/-
8- 1-93	to	10- 1-93		3 ,,	ரூ. 360/-
9- 1-93	to	12- 1-93	பெரியபாதை	4 ,,	ரூ. 470/-
11- 1-93	to	16- 1-93	மகர ஜோதி	6 ,,	ரூ. 675/-
17- 1-93	to	19- 1-93	பெரியபாதை	3 ,,	ரூ. 360/-

மேற்கண்ட சபரிமலைப் பயணங்கள் பல வழித் தடங்களில் செல்கின்றன. மேற்கண்ட தொகைகள் யாவும் பஸ் கட்டணம், காலை ஆகாரம், பகல் சாப்பாடு, மாலை ஸ்வீட் காரம், காபி, இரவு ஆகாரம் உள்ளிட்டதாகும். எங்களிடம் இருமுடி கட்டுவதென்றால் ரூ. 55/- தனி அட்வான்ஸ் ரூ. 150/- வீதம் செலுத்தி விரைவில் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

சௌத் இந்தியா கார்ப்பரேஷனின் பொன் விழா

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட் (பொறியியல் துறை) நிறுவனத்தின் பொன் விழா நிகழ்ச்சிகள் 30-10-92 அன்று கோவை இராமகிருஷ்ண கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நிகழ்ந்தன.

விழாவில் சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் டாக்டர் திரு. கே. எஸ். கேசவமூர்த்தி தலைமை ஏற்றுச் சிறப்புரையாற்றினர். செட்டிநாட்டரசர் டாக்டர் திரு. எம். ஏ. எம். இராமசாமி செட்டியார் வரவேற்றுப் பேசினர்.

குமாரராணி திருமதி மீனா முத்தையா அவர்கள் பொன்விழா மலரை வெளியிட தொழிலதிபர் திரு. எஸ். வி. பாலசுப்பிரமணியம் அதனைப் பெற்றுக் கொண்டார்.

காலஞ்சென்ற கொச்சின் திரு. நாச்சியப்ப செட்டியார் கருங்குளம் திரு. ராம. ரெங்கனாதன் செட்டியார் ஒ. சிறுவயல் திரு. லெ. சண்முகம் செட்டியார் பத்மஸ்ரீ டாக்டர் திரு. வி. வைத்திய சுப்பிரமணிய அய்யர் ஆகியோரின் சிறப்பான சேவையைப் பாராட்டி அன்னார்களின் புதல்வர்களிடமும், மற்ற பணியாட்களுக்கும் திருமதி சிகப்பி இராமசாமி அவர்கள் விருதுகளை வழங்கினர்கள்.

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட் பொது மேலாளர் திரு. சபா.சிங்காரம் அறிக்கை வாசிக்க பன்னாரி அம்மன் சுகர்ஸ் துணைத்தலைவர், நிர்வாக இயக்குநர் திரு. எஸ். வி. பாலசுப்பிரமணியன், அம்பாமுத்திரம் மதுரா கோட்ஸின் தலைவர் திரு. எஸ். சடகோபன்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. சி. மோஹன், கோவை சங்கர் & அஸோசியேட்ஸ் திரு. டி.எஸ். ரமணி சங்கர், சென்னை அஸ்வத்த நாராயணா ஈஸ்வரா திரு. ஹெச். ஏ. ஈஸ்வரா, மேட்டூர் கெமிக்கல்ஸ் & பிளாஸ்டிக்ஸ் மூத்த துணைத் தலைவர் திரு. கே. திருமலை, கோவை நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எஸ்ஈ.எஸ்வி நாராயணன், கவிஞர் திரு. செல்லகணபதி ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். சௌத் இந்தியா கார்ப்பரேஷன் பொது மேலாளர் (தொழில் நுட்பம்) திரு. எஸ். ரெத்தினம் செட்டியார் நன்றி கூறினார். விழாவின் தொடக்கத்தில் டாக்டர் சிவ. சிதம்பரம் இறை வணக்கம் பாடினார். இரவு விருந்தும் அதன்பின் இன்னிசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன.

மதுரை நகர விடுதியில் பிள்ளையார் நோன்பு

எப்போதும் போல் 14-ஆவது ஆண்டாக, வருகிற 29-12-92 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில், மதுரை நகர விடுதிப் புதிய கட்டிடத்தில் பிள்ளையார் நோன்பு கொண்டாடப் பெறவிருக்கிறது. அதில் கலந்து கொள்ள விரும்புவோர் ரூ. 6/- வீதம் சங்க அலுவலகத்தில் கட்டணம் செலுத்தித் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என நகரத்தார் சங்கத்தின் செயலாளர்கள் அறிவித்துள்ளனர்.




முத்தான முத்தமிழே ... !

இரா. ஆறுமுகம், குளிபிறை

கண்ணின் மணியே கருத்துக் களஞ்சியமே
பொன்னார் மேனியே பூவிதழின் நறுந்தேனே
வரையாத ஓவியமே வசந்தமுல்லை நறுந்தேனே
குறையாத செல்வமே குன்றிலிட்ட திருவிளக்கே
ஆடிவரும் தென்றலே அழகான ஆனிமுத்தே
பாடிவரும் பைந்தமிழே பவளமணிப் பூச்சரமே
முத்தான முத்தமிழே முக்கனியின் நறுஞ்சுவையே
சொத்தாக பிறந்ததினால் சொக்குதடா எம்மனசு
குலத்துப் பெருமைதனை கோபுரமாய் நீயுயர்த்த
சமத்து நீ தோன்றிபதால் சங்கடங்கள் தீர்ந்ததப்பா
பத்தாவின் பணிகளை எத்தாக நீசெய்ய
முத்தாக வந்திட்ட மும்மணியே எம்மகனே
அப்பாவைப் போல்நீ தப்பாது பிறந்ததினால்
சுப்புவே எனப்பெயரிட்டு சுந்தரமாய் வளர்த்திடுவோம்
சித்தம் இனிக்குதடா செங்கரும்பே கண்ணுறங்கு
புத்தம் புதியநல் புத்தகமே உன்னை
நித்தம் தாலாட்டி நிம்மதியாய் நீயுறங்க
ஆத்தாள் ஆட்டுகிறேன் அயர்ந்து நீ கண்ணுறங்கு

பெருமைக்குரிய ஆச்சிமார்களே ! உங்களுக்குத் தெரிந்த தாலாட்டுப் பாடல்களை தாலாட்டுப் பகுதி, ''நகரத்தார் குரல்'', மதுரை-625 009 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அது பலருக்கும் உதவட்டும்.



காசி நகர விடுதியிலிருந்து சுவாமி தெரிசனம் செய்வதற்காக தங்க விசாலாட்சி உற்சவ விக்கிரகத்தை 24–10–92 (தீபாவளிக்கு முதல் நாள்) இரவு 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் நகரத்தார் சார்பாக கீழே நகரேஸ்வரர் திருக்கோவிலுக்கு எடுத்துச் செல்லும் காட்சி. அருகே (இ–வ) செவ்வூர் திரு. வள்ளியப்பன், திரு. உல. சுப. உலகப்பன், திரு. இராம. இராமநாதன் செட்டியார், திரு. வி. கே என். கண்ணப்பன் ஆகியோர்.

நகரத்தார்களின் காசி யாத்திரை

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டும் நகரத்தார்கள் சென்னையிலிருந்து வாரணசி துரித இரயிலில் வாரணசி சென்று சுவாமி தரிசனம் முடித்து நலமாக அவரவர் ஊர் திரும்பினர்.

அவர்கள் வாரணசியில் தீபாவளியன்று (25-10-92) கங்காஸ்நானம்செய்து காசி விசாலாட்சி மற்றும் பக்கத்தில் உள்ள திருத்தலங்களில் வழிபாடு செய்தனர்.

தீபாவளியன்று மாலையில் நகர விடுதியில் 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் 108 பெண்கள் கலந்துகொள்ள திருவிளக்குப் பூஜை நடைபெற்றது. திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் பக்திப் பாடல்களைப் பாடினர்.

காசி யாத்திரையில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் தலைவர் திரு. சுப. சண்முகம் செட்டியார், செயலாளர் திரு. சிடி. நடராஜன், பொருளாளர் திரு. வி. கே என். கண்ணப்பன் 'இரசிகமணி' திரு. இராம.

சிதம்பரம் செட்டியார் திருவாளர்கள் வே.வேலாயுதம் செட்டியார், இராம.இராமநாதன் செட்டியார் சே. நாகப்ப செட்டியார், உல. சுப. உலகப்பன், எஸ். சொக்கலிங்கம், வேந்தன்பட்டி குழந்தையன் செட்டியார், கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார், திரு. உ. கருப்பையா, கண்டனூர் சுப்பிரமணியன் செட்டியார் போன்றவர்கள் குடும்பத்தினருடன் பங்கு கொண்டனர். உணவுப் பொருட்கள் காரைக்குடியிலிருந்து கொண்டு செல்லப்பட்டு அனைவருக்கும் நல்ல விதமாக சாப்பாடு செய்து வைக்கப் பெற்றது.

நகரத்தார்கள் மற்றும் பொது மக்களின் தரிசனத்திற்காக தங்க விசாலாட்சி நகரேஸ்வரர் திருக்கோயிலில் 24, 25 & 26–10–92 ஆகிய மூன்று தினங்களும் வைக்கப் பெற்றிருந்தது.

இவ்வாண்டு நகரத்தார் ஆண்களும் பெண்களுமாக சுமார் 500 பேர் காசி யாத்திரையில் பங்கு பெற்றனர்.

கந்தர் சஷ்டி விழா

கம்பம் நகரத்தார் சங்கத்தின் சார்பில் காசிவிஸ்வநாதர் சுவாமி கோவிலில் 26–10-92 முதல் 6 நாட்கள் கந்தர் சஷ்டி விழா சிறப்பாக நடத்தப் பெற்றது. அவ்வமயம் காசிஸ்ரீ திரு. அரு சோமசுந்தரன் ''அரிச்சந்திர புராணம்'' ''நள புராணம்'' பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

நிறைவுநாள் பட்டாபிஷேகத்தின்போது நிகழ்ந்த விழாவிற்கு கம்பம் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. அ. இராமநாதன் செட்டியார் தலைமை தாங்கிக் கவிஞருக்குப் பரிசுகள் வழங்கினார். திரு. செட்டியப்பன் பொன்னுடை போர்த்தினார். திரு. லெ. சுப்பையா வரவேற்றார்.

திருமணம்

நற்சாந்துபட்டி திரு ந. மெ. நல்லகருப்பன் செட்டியார் பேத்தியும் திரு, க்ஷேம். என். மெய்யப்பனின் புதல்வியுமான மீனாள் B Com., D C. A. க்கும் கடியாபட்டி இராமச்சந்திரபுரம் திரு. தீ. சொ. சொ. சொக்கலிங்கம் செட்டியார் புதல்வன் முத்துராமன் B. E. க்கும் 4–11–92 அன்று நற்சாந்துபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்தில் நகரத்தார் பெருமக்களும், திருப்பூர், கோவை நகரத்தார் தொழிலதிபர்களும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீரங்கத்தில் வேதம் பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா !

ஸ்ரீ வேத வேதார்த்த ஸ்ரௌத வித்யாசாலாவின் 1 ஆவது ஆண்டு விழா மற்றும் வேதம் பயின்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் விழா திருச்சியை அடுத்த ஸ்ரீரங்கத்தில் 5-11-92 மாலை நடைபெற்றது.

பள்ளத்தூர் ஏஆர். இராமசாமிச் செட்டியாரால் 'ஸ்ரீ வேத வேதார்த்த ஸ்ரௌத வித்யா சாலா' என்ற வேத பாடசாலை 1974 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கத்தில் தொடங்கப் பெற்றது. இந்தப் பாடசாலையில் மாணவர்களுக்கு கிரந்தம் மற்றும் தினசரி செய்ய வேண்டிய பூஜா விதிகள் ஆகியவை பற்றிப் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. சிவாகமம், தமிழ், கணக்கு முதலிய பாடங்களும் கற்பிக்கப் பெற்று வருகின்றன. தென்னகத்திலேயே சிரௌதமும். கல்பசூத்ரமும் கற்றுக் கொடுக்கும் சிறந்த பாடசாலையாக இது செயல்பட்டு வருகின்றது. இராமசாமிச் செட்டியாரின் மறைவுக்கு பின்னர் அவரது புதல்வர் இராம. அருணாசலம் செட்டியார் அவர்கள் இந்த வேத பாடசாலையின் நிர்வாக அறங் காவலராகப் பொறுப்பேற்று சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறார்.

இந்த வித்யாசாலாவின் 18 ஆவது ஆண்டு விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா 5-11-92 அன்று ஸ்ரீரங்கத்தில் நடந்தது. விழாவில் ஸ்ரீஅகோபில மடத்தின் 45ஆவது பட்டம் ஸ்ரீவன் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்திர மகாதேசிகன் சுவாமிகள் தலைமையேற்று மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி உரையாற்றினர்.

விழாவில் திருச்சி மாவட்டத் தலைமை நீதிபதி திரு. ஆர். சிவக்குமார், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. கே. நாகப்பன், திருவாளர்கள் வி. ரகுநாத சாஸ்திரிகள், கிருஷ்ணமூர்த்தி கனபாடிகள், எஸ் முத்துகிருஷ்ண சர்மா, டி. எச். கல்யாணசுந்தர கனபாடிகள், ஆசிரியர் திரு. வீரராகவாச்சாரியார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர் திரு. நாராயணன் சமஸ்கிருதத்தில் வரவேற்பு இதழ் வாசித்து அளித்தார். பாடசாலை முதல்வர் திரு. ஆர். சுந்தர்ராஜன், ஆசிரியர் திரு. வீரராகவாச்சாரியார் ஆகியோர் கௌரவிக்கப் பெற்றனர்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வேத பாடசாலாவின் நிர்வாக அறங்காவலர் திரு. இராம. அருணாசலம் செய்திருந்தார்.

ரத்தினவேல் பூசை

தேவகோட்டை தி. ராம. சாமி வீட்டில் 10-11-92 அன்று நிகழ்ந்த ரத்தினவேல் நகரத்தார் மகேசுவர பூசையில் காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் "கந்த புராணம்" பற்றி உரையாற்றினர். தி வகை நகரத்தார் சார்பில் டாக்டர் திரு. சபா. அருணசலம் அனைவரையும் வரவேற்று நன்றி கூறினர்.

உ

சிவமயம்

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
23-8-1929

மறைவு:
19-12-1987

நாட்டரசன்கோட்டை

வீர. ஆ. ராம. வெங்கடாசலம் செட்டியார்

(முன்னாள் அலுவலகக் கண்காணிப்பாளர்
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை-22)

என்றும் எங்கள் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்று
நிலைத்து நிற்கும் இதய தெய்வத்திற்கு
அஞ்சலி செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

ராம. வெ. சொர்ணவல்லி ஆச்சி - மனைவி

மகன்கள்:

வெ. இராமசாமி	—	கண்ணாத்தாள் இராமசாமி
வெ. கண்ணப்பன்	—	உமையாள் கண்ணப்பன்
வெ. முருகப்பன்	—	புவனேஸ்வரி முருகப்பன்
வெ. மாணிக்கவாசகம்	—	நாச்சம்மை மாணிக்கவாசகம்
வெ. சோமசுந்தரம்	—	மீனாட்சி சோமசுந்தரம்

மற்றும் பேரன் பேத்திகள்

"ஸ்ரீ வேங்கட இல்லம்"
2/195-B, பெருங்குடி,
மதுரை-625 022

வேண்டும்; வேண்டும்

பழநியப்பன் பாலாஜி M. A., திருச்சி

நல்ல கல்வி வேண்டும்
நலம் பேணும் நண்பர் வேண்டும்
நல்ல உறவு வேண்டும்
நம்புகிற மனிதர் வேண்டும்
உடலிலே இளமை வேண்டும்
உள்ளத்திலே மகிழ்வு வேண்டும்
பிணியற்ற உடல் வேண்டும்
பணி செய்யும் மனைவி வேண்டும்
சிறப்பான தொழில் வேண்டும்
சிதறாத வருவாய் வேண்டும்
குலம் வளர மக்கள் வேண்டும்
கொடை செய்யும் எண்ணம் வேண்டும்
சத்தியச் சொல் வேண்டும்
சகிக்கின்ற தன்மை வேண்டும்
அன்பு மனம் வேண்டும்
ஆதரிக்கும் பண்பு வேண்டும்
உடைகள் சிறப்பாய் வேண்டும்
உதவிக்குப் பணியாள் வேண்டும்
உணவுகள் சுவையாய் வேண்டும்
ஓய்வு பெற இல்லம் வேண்டும்
எண்ணத்தில் தூய்மை வேண்டும்
இதயத்தில் பக்தி வேண்டும்
எப்பொழுதும் பணிவு வேண்டும்
இறைவனின் திருவருள் வேண்டும்
இத்தனையும் எல்லோர்க்கும்
இறைவா நீ தருவாய்
அத்தனையும் தந்தருள
உன்னைப் பணிகின்றேன் நான்!

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கம் முன்னின்று நடத்தும் கூட்டுத் திருமணங்களின் 16ஆவது தொடர் திருமணங்கள், 25-1-1993 (தை மீ 12 உ) திங்கட்கிழமை அன்று பிள்ளையார்பட்டியில் நடைபெற உள்ளன. இத்திருமணங்களில் பங்குபெற விரும்பும், நகரத்தார், பெண், மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு அதற்குரிய படிவத்தினைப் பெற்று நிறைவு செய்து 10-12-92 க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள்

செயலாளர், நகரத்தார் சங்கம்
2, ஒத்தமால் தெரு,
திருச்சிராப்பள்ளி-620 002

தொலைபேசி எண் : 23318 p p.



சிதம்பரம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் மூன்றும் ஆண்டு விழா 6-9-92 அன்று நடைபெற்றபோது முனைவர் திரு. ச. மெய்யப்பன் தலைமையில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் சிறப்புரை யாற்றும் காட்சி. அருகே இளைஞர் சங்கத் தலைவர் திரு. நா. நடராஜன், செயலாளர் திரு. க தண்ணீர்மலை.

அரிமழத்தில் இலவச மருத்துவ முகாம்

அரிமழம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் அரிமழம் தே. முருகப்ப செட்டியார் அறக் கட்டளையின் சார்பில் தே. முரு. உமையாள் ஆச்சி நினைவு, 8ஆவது இலவச மருத்துவ முகாம் 11-10-92 காலையில் நடை பெற்றது.

கண், காது, மூக்கு, தொண்டை, மகளிர் நலம், குழந்தைகள் நலம், அறுவைச்சிகிச்சை எலும்புச்சிகிச்சை, பொது மருத்துவம் முதலிய துறைகளில் ஏழு சிறப்பு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தார்கள். 153 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். முகாமில் மருந்துகளும் டானிக்குகளும் இலவசமாக வழங்கப் பெற்றன.

உ. சிறுவயல் ஆஞ்சநேயர் திருக்கோவில்

காரைக்குடி அருகில் உள்ள உ. சிறுவயல் தேனாற்றங்கரையில் அமைந்துள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலின் ஏழாம் ஆண்டு ஹனுமத் ஜெயந்தி விழா 23-12-92 புதன் கிழமை நடைபெறும் என அக் குழுவின் பொறுப்பாளர் திரு. இராம. அழகப்ப செட்டியார் அறிவித்துள்ளார்.

சென்னையில் கோவிலூர் சுவாமிகள்

இறைவன் தனது செயல்களை குரு வடிவத்தில் வந்து செய்கின்றான். கலி காலத்தில் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகின்ற மனிதன் இறைவனை நினைப்பதற்குக் கூட முடியாமல் தவிக்கின்றான். அப்போது இறைவனே குருவின் உருவத்தில் அவனிடம் வலியச் சென்று அவன் துன்பங்களைப் போக்குகின்றான்.

18-9-92 முதல் 26-9-92 வரை சென்னையில் தங்கிய கோவிலூர் சுவாமிகள் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களது துயரங்களைத் துடைத்து நல்லாசி வழங்கினார்கள். அப்போது பக்தர்களின் வீடுகளில் பூசை, பஜனை, ஆன்மீகச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், வினா — விடைகள் முதலியவை சிறப்பாக நடைபெற்றன.

திரைப்படத் தயாரிப்பாளர் திரு. பழ. கருப்பையாவின் இல்லத்தில் நடைபெற்ற அரைநாள் முகாமில் புலவர்கள், அறிஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாரத நாட்டின் பண்பாடுகளை வெளிநாடுகளில் பரப்பி வருவதற்குத் தூண்டுகோலாக இருக்கும் கலா க்ஷேத்திரத்திலும் சுவாமிகளுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பெற்றது

சேலத்தில் சத்தாபரண விழா

சேலம் அருள்மிகு ராஜ கணபதி கோவிலில் ஒன்பதாம் ஆண்டு சத்தா பரண உற்சவம் சிறப்பாக நிகழ்ந்தது.

சத்தாபரண உற்சவத்தின் 10 ஆம் நாள் விழா சேலம் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் நடத்தப்பெற்றது. காலையில் நடைபெற்ற விழாவில் சேலம் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. எம். எஸ் சொக்கலிங்கம் செட்டியார், சத்தாபரண உற்சவக்குழுத் தலைவர் ஆடிட்டர் திரு. சித. அண்ணாமலைச் செட்டியார், செயலாளர் திரு. பழனியப்பன் திரு. ஏகப்பன், திரு. திருநாவுக்கரசு செட்டியார் உட்பட ஏராளமான நகரத்தார்கள் கலந்து கொண்டனர்.

விசாலாட்சி சுப்பிரமணியம் 'கண்ணதாசனும், கடவுள் உணர்வும்' என்ற தலைப்பில் சொற்பொழிவும், பின்னர் மதுரை அபிநயா நடன நாட்டிய கலைச் சங்கத்தின் நடனமும் நடைபெற்றன.

இரவு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நூதன புஷ்பப் பல்லக்கில் அருள்மிகு ராஜ கணபதி ஊர்வலம் நடைபெற்றது.

தகவல் : அண. நடராஜன்

திருமணம்

தேவகோட்டை முத்து கரு. மு லெட்சுமணன் செட்டியார் புதல்வன் விஸ்வநாதன் - ஹேமா திருமணம் 13-11-92 அன்று தேவகோட்டையில் சிறப்பாக நடைபெற்றது. காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் மணமக்களை வாழ்த்திப் பேசினர். டாக்டர் திரு ச. மெய்யப்பன், திரு. லேனா தமிழ்வாணன் ஆகியோர் மணமக்களை நேரில் வாழ்த்தினர். ஏராளமான பதிப்பக அன்பர்கள் மணவிழாவில் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.

திருமணம்

தேவகோட்டை திரு. தெவ. சிவி. உடையப்ப செட்டியார் புதல்வி செல்வி அடைக்கம்மை B. Com. க்கும் மேற்படி ஊர் திரு. சுப. அண. இராம. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வன் செல்வன் அழகப்பன் (M. Com) D. H. க்கும் 1–11–92 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

நாட்டரசன்கோட்டை திரு. சேவு. ராம. ராம. கருப்பையா செட்டியார் புதல்வன் செல்வன் முத்து கணேசனுக்கும் கொத்தமங்கலம் திரு. சி. ராம. மு. ராம. கு. லெட்சுமணன் செட்டியார் புதல்வி செல்வி உண்ணுமலைக்கும் 4-11-92 அன்று கொத்தமங்கலத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

மதகுபட்டி திரு. கண. க. ராம. கண. கயிலாசம் செட்டியார் புதல்வன் செல்வன் சுந்தரமூர்த்தி என்கிற முருகப்பனுக்கும் கீழப்பூங்குடி திரு. ராம. நா. லெட்சுமணன் செட்டியார் புதல்வி செல்வி தமிழ்ச்செல்விக்கும் 1–11-92 அன்று கீழப்பூங்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

பாகனேரி திரு. அரு. கரு. வே. சுப்பிரமணியன் செட்டியார் பேரனும் திரு. சுப்பையா செட்டியாரின் புதல்வனுமான செல்வன் இராதாகிருஷ்ணன் M. Com. க்கும் மதகுபட்டி சொக்கலிங்கபுரம் திரு. சுப. ஆறு. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி செல்வி கண்ணம்மைக்கும் 8–11–92 அன்று மதகுபட்டியில் திருமணம் சிறபபாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

நடராஜபுரம் முரு. ராம. ராம. முருகப்ப செட்டியார் அவர்கள் பேத்தியும் திரு. இராமநாதன் என்ற சேதுவின் புதல்வியுமான செல்வி நாகரத்தினம் என்ற ரத்னுவுக்கும் வலையபட்டி பழ. ஜெயங்கொண்டான் செட்டியார் அவர்கள் பேரனும் டாக்டர் திரு. பழநியப்ப செட்டியார் புதல்வனுமான செல்வன் சுரேஷ் M. B. B. S. க்கும் 8–11–92 அன்று நடராஜபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நாசிக் நகரச் சத்திரத் திருப்பணி

— சிவஸ்ரீ குப. சொக்கலிங்கம் —
நாட்டரசன்கோட்டை

நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குச் சொந்தமான சத்திரங்களுள் மிகப் பழமை யானது நாசிக் பஞ்சவடி சத்திரம். இச்சத்திரம் சுமார் 125 ஆண்டு களுக்கு முந்தியது. சுவரெல்லாம் களிமண், வைக்கோல் பிசைந்து அக்காலத்தில் கட்டப் பெற்றது. மேல் வீட்டில் நடந்தால் தளம் அதிரும். அது விழுந்து விடுமோ என்ற அச்சமும் ஏற்படும்.

இந்த நிலையில் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத் தலைவர் திரு. சுப சண்முகம் உள்ளிட்ட குழு அச்சத்திரத்தை நேரில் பார் வையிட்டு சத்திரம் மற்றும் ஸ்ரீ கார்த்திக் சுவாமி என அழைக்கப் பெறும் ஸ்ரீ தெண்டாதபாணி கோவிலைத் திருப்பணி செய்வதற் குக் கடந்த மூன்ருண்டுகளுக்கு முன்பு பணிகளைத் தொடங்கியது.

தலைவர் உள்ளிட்ட ஆசாரி, கொத்தனுர், ஸ்தபதிகள் என நாங்கள் பன்னிருவர் மார்ச்'92 இறுதியில் பஞ்சவடி சென்ருேம். சுமார் ஒரு மாத காலப் பணியில் சத்திரம் புத்துயிர் பெற்றது.

நம் முன்ஞேர்கள் நதிக் கரை தோறும் முக்கியமான தலங்களில் சத்திரங்களைக் கட்டி யுள்ளார்கள். அப்படி கோதா வரிக் கரையில் இருந்த பழைய சத்திரத்தை விலைக்கு வாங்கிய தாகக் கூறுவர். நமக்கு அங்கே மற்ருெரு சத்திரமும் இருக்கிறது.


கோவிலும் சத்திரமும் இணைந்து இருப்பதைக் 'கோவில் வீடு' என்றும் மற்ருெரு சத்திரத் தைப் 'புதுமடம்' என்றும் அழைக்கிருர்கள்.

நாசிக் நல்ல நகரம். குளு மையான தலம். ஏராளமான தொழிற்சாலைகளைக் கொண்டது. பக்கத்தில் ஜோதிர்லிங்க தலங் களில் ஒன்ருன திரியம்பகம் இருக் கிறது. மலைகள் சூழ்ந்த தலம். மலைமீது ஏறிச் சென்ருல் கோதா வரி உற்பத்தியைப் பார்த்து வர லாம். மலைக் குகைகளும் உண்டு. முனிவர்கள் வசித்த சுவட்டைப் பார்க்கலாம்.

சுமார் 2 மாதங்களில் முடிய வேண்டிய திருப்பணி ஆறு மாதங் களுக்கு நீடித்துவிட்டது.

'கார்த்திக் சுவாமி' என வட நாட்டவர்களால் அழைக்கப் பெறும் நமது தெண்டாயுதபாணி கட்டழகுக் கடவுளாகக் காட்சி தருகிருர். இப்படி ஒரு சிற்பச் சிலையை தமிழகத்தில் கூட காண முடியாது. கடைசல் செய்தது போல கால்கள்; கம்பீரமான தோற்றம். காண்பவர் உள்ளத் தைக் கவரும் அழகு. இவர் எத் தனையோ பேருக்கு புத்திர பாக் கியம் அருளியிருக்கிருர். இச் சிலைக்குப் பக்கத்தில் பழைய தெண்டாயுதபாணியும் இருக் கிருர். நாசிக் மற்றும் பம்பாயில் வாழும் தமிழர்கள் மட்டுமல்லாது வடநாட்டவரும் நம் தெண்டாயுத பாணியைக் கொண்டாடி மகிழ் கிருர்கள்.

தலைவர் அவர்களின் தீவிர முயற்சியாலும் பம்பாய் நகரத் தார் அளித்த உதவியோடும் முருகப்பெருமானின் ஒத்துழைப் போடும் திருப்பணி வேலைகள் சிறப்புற நடைபெற்று நிறை வெய்தி 9-9-92 அன்று (ஆவணி மீ 24உ) குடநீராட்டு விழா சிறப்புற நடந்தேறியது.



திருமணம்

பாகனேரி எவர்பிரைட் திரு ஆவி. நா. நாச்சியப்ப செட்டியார் பேத்தியும் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்த டாக்டர் திரு. என். என். கண்ணப்பனின் புதல்வியுமான செல்வி ஷர்மிளா (B. A.) க்கும் கல்லல் திரு. கும. நா. நா. ராம. நா. சுப்பையா செட்டியார் புதல்வன் செல்வன் இராமநாதன் என்ற மோகன் B. Sc, (Hons) (A. C. A.) க்கும் 1-11-92 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி நடைபெற்ற வாழ்த்தரங்கிற்கு தொழிலதிபர் திரு. லெ. நா. தலைமை ஏற்றார். மணமக்களை வாழ்த்தி மதுரை-இராமநாதபுரம் வணிகக் கழகத் தலைவர் திரு. வி. வி. எஸ். யோகன், டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார், டாக்டர் திரு. அமீர்ஜான், திரு. உ. சுப்பிரமணியன், திரு. வே. வேலாயுதம் செட்டியார் கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் திரு. ஆர். சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர். முன்னதாக திரு. இராம. அண்ணாமலை வரவேற்க டாக்டர் திரு. என். என். கண்ணப்டன் நன்றி கூறினார்.

மணமக்களை வாழ்த்தி பாரதத் தலைமை அமைச்சர் மேதகு பி. வி. நரசிம்மராவ், திருமதி சோனியா காந்தி, திரு. ஜி. கே. மூப்பனார், திரு. ஏ. ஜி. எஸ். ராம்பாபு போன்றவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

துணைவேந்தர் தேர்வாணைக் குழுவில் அழகப்பன்

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தேர்வாணைக் குழுவில் தமிழக அரசின் பிரதிநிதியாக ஆத்தங்குடியைச் சேர்ந்தவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவருமான டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார்கள்

இயற்கை எய்தினர்

அலவாக் கோட்டையைச் சேர்ந்த திரு சிவ நா. ராம. லெ. சீனிவாசன் செட்டியார் தமது 50 ஆவது வயதில் 14—11—92 அதி காலே சிவகங்கையில் இயற்கை எய்தினர்.



இவர் பல ஆண்டுகள் பரமக்குடியிலும் மலேஷியாவிலும் தொழில் செய்து வந்தவர். சிறுநீரகக் கோளாறு காரணமாக நோய்வாய்ப் பட்டிருந்த இவர் அண்மையில் இயற்கை எய்தினர். இறுதிச் சடங்குகள் சிவகங்கையில் நடைபெற்றன.

இவருக்கு மனேவியும் இரு புதல்விகளும் ஒரு புதல்வனும் உள்ளனர்.

கம்பம் சங்கத்தில் சிறப்புக் கூட்டம்

கம்பம் நகரத்தார் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் 29-10-92 அன்று திரு. அ. ராமனுதன் செட்டியார் தலைமையில் நடை பெற்றது. திரு. சுப சின்னச் செட்டியப்பன் இறைவணக்கம் பாட, திரு. லெ. சுப்பையா செட்டியார் வரவேற்ருர். 'பொற் கிழிக் கவிஞர்' திரு. அரு. சோம சுந்தரன் சிறப்புரை ஆற்றினர். திரு. எஸ்பி. சோமசுந்தரம் செட்டியார் நன்றி கூறினர்.

தமிழ்வாணன் : சில செய்திகள்!

ஃ திரு. எம். ஜி. ஆர். திரை உலகில் இருந்த காலத்தில் அவருக்கு 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தை வழங்கியவர் திரு. தமிழ்வாணன்

ஃ திரு. தமிழ்வாணன் சென்னே சைதாப்பேட்டை நீதி மன்றத்தில் கௌரவ மாஜிஸ்திரேட்டாகச் சேவை செய்திருக்கிருர்.

ஃ சேலம் அருகே உள்ள மோகனூரில் 'வெள்ளேயனே வெளியேறு' இயக்கத்தில் சேர்ந்து 6 மாதங்கள் திரு. தமிழ்வாணன் தலைமறைவாக இருந்தார்.

ஃ 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. விடம் முறையாகத் தமிழ் மொழியைக் கற்றவர் திரு. தமிழ்வாணன்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை - 625 009ல் அச்சிட்டு நடராஜ் அண்ணுமலே அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

Regd No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL

நகரத்தார் குரல்

சந்தா விவரம்

ஓர் ஆண்டு (அஞ்சல் செலவு உட்பட)	ரூ.	30-00
டெபாசிட் சந்தா (,,)	ரூ.	300-00
வெளிநாடு (ஓர் ஆண்டுக்கு வான ஊர்திக் கட்டணம் உட்பட)	ரூ.	200-00

∴ சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்பலாம்.

∴ பணம் அனுப்பும்போது சந்தா உறுப்பினர் எண் அல்லது எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

∴ பாங்க் செக் டிராப்ட் ஆகியவை ''நகரத்தார் குரல்'' என்ற பெயரில் இருத்தல் வேண்டும்.

அடுத்த இதழ்...

சரித்திரம் படைத்த

சின்ன

அண்ணாமலையின்

நினைவு இதழாக

பல சிறப்புச் செய்திகள்

கட்டுரைகளுடன்

வெளிவரும்

